திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே மதிற் சுவர் இல்லாத காரணத்தினால் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருவதாக நான் இந்த மாமன்றத்தில் ஒரு முறை தெரிவித் திருந்தேன். இந்த மருத்துவமனையைச் சுற்றிலும் மதிற்சுவர் எழுப்பும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய நிதிநிலைமையை மனதிலே கொண்டு முடிந்தவரை இப்படிப்பட்ட சுற்றுச் சுவர் களைக் கட்டுவதைத் தவிர்த்து, அதற்கு ஆகின்ற செலவுகளை கட்டிடமாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற புதிய முறையை கடந்த கொஞ்ச ஆண்டுகளாக நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சில ஆண்டுகளாக செய்து கொண் டிருக்கிறோம். எனவே, அந்த வகையில் சுற்றுப்புறச் சுவர் கட்டுவது என்பது கொஞ்சம் சிரமமான காரியம். ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் முயற்சி எடுக்கலாம். பல இடங் களில் இப்படிச் செய்திருக்கிறார்கள். நிறைய மருத்துவமனை களிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களே சுற்றுப்புறச் சுவர்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் கட்டடங்களைக் கூட கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அரசினுடைய சார்பாக நாம் கட்டடத்தைக் கட்டிக் கொண்டிருக் கிறோம். மூன்று மாதத்திற்குள் அங்கே யாரையாவது அணுகி சுற்றுப்புறச் சுவர் கட்டுவதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களால் என்ன ஒத்துழைப்புத் தரமுடியுமோ, அந்த ஒத்துழைப்பைத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 484, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

484—

பாபநாசத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளைப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்டுதல்.

*20456—திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாப நாசத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளைப் பணி மனைக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

SATYAMEVA JAYATE / TRUTH ALONE TRIUMPHS

1994 மே 3]

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியிலே பாபநாசம் என்பது ஒரு பெரிய நகரம். இந்த நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளை ஒன்று மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 26 பஸ்கள் இருப்பதாக நான் அறிகிறேன். இந்த டெப்போ ஆரம்பித்த காலத்திலிருந்து அது லாபகரமான முறையிலே நடந்து வருவதாக அதிகாரிகள் சொல்கின்றார்கள். நமது அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது இந்த பாபநாசத்தை சுற்றுலா மையமாக அறிவித்திருக்கிறார்கள். குற்றாலத்திற்கு அடுத்தபடியாக அகஸ்தியர் அருவி என்ற ஒரு அருவி இருக்கிறது. அதைக் காண்பதற்கும் குளிப்பதற்குமாக பல இடங்களில் இருந்து மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது அந்த டெப்போ இருக்கின்ற இடம் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் என்று நான் அறிகிறேன். மிகவும் குறுகிய இடம். பாபநாசத்திலிருந்து சென்னைக்கும், வெளி மாநிலங்களுக்கும் அங்கேயிருந்து பஸ்கள் சென்று கொண்டிருக்கின்றன. மேலும் நமது மாண்புமிகு இதய தெய்வம்புரட்சித் தலைவியினுடைய திருநாமத்தை ஏந்தியிருக்கிற ஜெ. ஜெ. பஸ்கள் கூட இடம் இல்லாமல் ரோட்டிலேயே நிறுத்தப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே தனிக்கவனம் செலுத்தி எப்படியாவது அங்கே ஒரு டெப்போ அமைப்பதற்கான இடத்தை வாங்கி அங்கே டெப்போ அமைப்பதற்கான கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைக் கோரிக்கையாக வைத்து செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் கிளைப் பணிமனை 63,200 ரூபாய் மதிப்பீட்டில், பராமரிப்புக் கட்டடம் ஒன்று அங்கே கட்டப்பட்டிருக்கிறது. மெயின்டெனன்ஸ் மட்டும் தான் செய்வதற்காக அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்

பிடுவது போல பணிமனை கட்டி பெரிய அளவில் செய்வதற்கு இயலாது. அங்கே இருக்கிற மேலாளர் சொன்னதாகச் சொன்னார்கள். அது லாபத்திலே ஓடுவதாகச் சொன்னார்கள். மொத்தத்திலேதான் கணக்குப் பார்க்க வேண்டும். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்பதில் தமிழகத்தில் ஓடக்கூடிய மொத்தப் பேருந்துகளில் எவ்வளவு லாபம் இருக்கின்றது. எவ்வளவு மொத்த வருவாய் இருக்கின்றது என்பதை அதிலே தான் கணக்கிட முடியுமே தவிர, ஒரு பகுதியை வைத்துக் கொண்டு அதிலே நாம் கணக்கிட முடியாது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சு காலத்திற்கு முன்பாக சம்பந்தப்பட்ட திருவள்ளுவர் டெப்போவைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கே டெப்போ கட்டுவதற்காக நிலங்களையெல்லாம் பார்த்தார்கள். நான் கூட ஒரு இடத்தைக் காட்டினேன். ஆனால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். தயவுசெய்து எங்களுடைய நகரத்திலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போவை—நல்ல முறையில் செயல்பட்டுவரும் அந்தக் கிளைக்கு—நிரந்தரமாக சொந்தஇடத்தில் விரிவாகக் கட்டடம் கட்டுவதற்கு மீண்டும் அதைப் பரிசீலனை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 485, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 486. திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

486—

காரைக்குடி, கழனிவாசல்-சூரக்குடி சாலையை அகலப் படுத்துதல்.

*20471—திருமதி கற்பகம் இளங்கோ:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி, கழனிவாசல்-சூரக்குடி சாலையை அகலப் படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?